11th March 1964]

கட்டணமும் வாங்குகிறுர்கள். பெட்டிக்கு உரியவர்கள் தாங்களே எடுத்துக் கொள்வதாகச் சொன்னுலும் ஒத்துக்கொள்வதில்லே. இது பற்றி அரசாங்கம் தக்க ஏற்பாடு செய்யுமா?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : இது பற்றித் தனியாக டைரெக்டருக்கு எழுதினுல் அவர்கள் பரிசீலனை செய்வார்கள்.

* 219 Q.—Sri G. RAJARAM : Will the Hon. the Minister for Industries be pleased to state whether there is any proposal to construct a bus-stand in Tindivanam for the State Express buses ?

The Hon. Sri R. VENKATARAMAN : Yes.

*220 கேள்வி.—**திரு. இராம. அரங்கண்ணல் :** கனம் கைத் தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) சென்னே நகரத்தில் ஓடும் அரசாங்க பஸ்களின் கட்டணத்தை உயர்த்தும் உத்தேசமுண்டா ?

(இ) அப்படியானுல், கட்டணத்தை அதிகப்படுத்துவதின் காரணமென்ன ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : (அ) & (இ) தமிழ் நாட்டில் பஸ் கட்டணங்களேத் திருத்தும் திட்டமொன்றை அரசாங்கம் பரிசீலனை செய்து வருகிறது.

திரு. மா. இராசாங்கம் : அப்படி திருத்தும் பரிசீலனேயில் பெரும் சிக்கலே உண்டு பண்ணிக் கொண்டிருக்கிற ஒரு பைசா: இரண்டு பைசா இல்லாமல் ஐந்தாகவும், பத்தாகவும் மாற்றியமைக்க அரசாங்கம் உத்தேசிக்குமா ? 9-00 a.m.

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : பரிசீலனே செய்து கொண்டு இருக்கிறுர்கள். அந்தமாதிரி மாற்றியமைத்தால் கட்டணம் மிகவும் உயர்ந்து போகிறது என்ற நிலேமை ஏற்படுகிறது.

திரு. து. ப. அழகமுத்து : அரசாங்க பஸ்களில் உள்ள கட்டணத்தை மட்டும் உயர்த்துவதற்கு உத்தேசிக்கிறதா ? அல்லது தனிப்பட்டவர்கள் பஸ்களுக்கும் கட்டணத்தை உயர்த்த உத்தேசிக்கப்படுகிறதா ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : ஹோம் டிப்பார்ட்மெண்டிலிருந்து இதற்கான அறிக்கை ஒன்றை அவர்கள் ஆகஸ்ட் மாதத்தில் வெளியிட்டு அதற்கு அப்ஜக்ஷன்ஸ் சொல்லும்படி கோரியிருந்தார்கள். அதற்கான அப்ஜக்ஷன்ஸ் எல்லாம் வந்திருக்கிறது.. அதையெல்லாம் பரிசீலனே செய்து ராஜ்யத்தில் உள்ள எல்லா பஸ்களுக்கும்தான் இந்தக் கட்டண முறையை மாற்றியமைக்க உத்தரவுகள் பிறப்பிக்கப்படும்.

புலவர் கா. கோவிந்தன் : மோட்டார் வரி உயர்வுச் சட்டம் வந்த போது நம் அமைச்சர் அவர்கள் அரசாங்க பஸ் கட்டணத்தை உயர்த்த மாட்டோம் என்று உறுதிமொழி அளித்திருக்கிறுர்கள். அந்த உறுதிமொழியைக் காப்பாற்றுவார்களா ?

[11th March 1964

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : நாங்கள் காப்பாற்றினேம். 1962-ல் மோட்டார் வரி உயர்த்தப்பட்டபோதிலும் 1964 வரையில் சர்க்கார் பஸ்ஸில் கட்டணத்தை உயர்த்தவில்லை. ஆனல் தனியார் பஸ்களில் உயர்த்தியது அங்கத்தினர்கள் எல்லோருக்கும் தெரியும். ஆனல் மத்திய சர்க்கார் புதிதாக 25, 30 லட்சம் வரி விதித்தாலும் உயர்த்தக் கூடாது என்று சொன்னல் நஷ்டத்தில் ஓடினல் வருத்தம் ஒன்றுமில்லை என்று இந்த சட்ட சபையில் சொன்னல் அதை உயர்த்த மாட்டோம்.

திரு. ம. கமலநாதன் : அரசாங்க எக்ஸ்ப்ரஸ் பஸ் கட்டணங்கள் தனியார் ஓட்டும் பஸ்களின் கட்டணத்தை விட மிகவும் அதிகமாக யிருக்கிறது என்பதை அரசாங்கம் உணருமா ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : அதிகமாகத்தான் வைத்திருக்கிறேம். அப்படியிருந்தும் இடம் கிடைக்கவில்லை, அதனல் கஷ்டமாயிருக்கிறது என்ற புகார் அதிகமாக இருக்கிறது. அதிகமாக இருப்பதற்குக் காரணம் நாங்கள் கொடுப்பது லக்ஷுவரி கோச். மற்றவர்கள் கொடுப்பது அவ்வாறல்ல.

திருமதி பி. கே. ஆர். லஷ்மீகாந்தம் : சென்னை நகரில் குறைந்த பட்ச கட்டணம் 7 நயா பைசாவாக இருந்ததை பத்து நயா பைசாவாகத் தற்சமயம் உயர்த்தப்பட்டிருக்கிறதா ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : உயர்த்தப்படவில்லை இன்னும்.

திரு. எம். எஸ். மணி : பஸ் கட்டணத்தை உயர்த்துகிற காரணத்தால் கிடைக்கக் கூடிய வருமானத்திலிருந்து 25 சத விகிதத்தை தொழிலாளர்களுக்கு சம்பள சலுகையாகக் கொடுக்க அரசாங்கம் யோசிக்குமா ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : 55 சத விகிதம் தொழிலாளர்களுக்கு அதிகமாக கொடுத்த காரணத்தினல்தான் இன்று பஸ் கட்டணத்தை உயர்த்த வேண்டிய நிலைமை ஏற்பட்டிருக்கிறது.

திரு. ம. கமலநாதன் : விட்டுக் கொடுக்கக்கூடாது என்ற ஒரே ஒரு காரணத்திற்காகத்தான் அமைச்சர் அவர்கள் 'பஸ்ஸில் இடம் கிடைக்கவில்லை' என்ற அளவிற்குச் சொல்கிறர்கள். வேலூருக்கும் சென்னைக்கும் 3 ரூபாய் கட்டணம் உள்ள தனியார் பஸ்ஸில் இடம் கிடைக்காமல் அடுத்து பத்து நிமிடங்களில் செல்கிற கோவை எக்ஸ்ப்ரஸில் வேலூருக்குப்போக 4 ரூபாய் கட்டணம் கொடுக்கவேண்டியிருப்பதால் பத்து பேர்கள்கூட அதில் பிரயாணம் செய்வதில்லை என்பதை அறிவார்களா ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : கனம் அங்கத்தினர் அவர்கள் சொல்வது சரியல்ல. எங்கள் ஆக்குபேஷன் ரேட்ஸ் ஹையஸ்டாக இருக்கிறது. இன்னும் அதிக சர்க்கார் பஸ் போடவேண்டுமென்று வற்புறுத்துகிறர்களே தவிர, கனம் அங்கத்தினர் அவர்கள் சொல்வது போன்ற புகார் இன்றுதான் முதன் முறையாக நான் கேள்விப்படுகிறேன்.

11th March 1964]

திரு. து. ப. அழகமுத்து : தற்போது பஸ் கட்டணம் குறைவாகி இருப்பதால் அரசாங்க பஸ்களில் நஷ்டம் வருகிறது என்று அமைச்சர் கூறினர்கள். அதே போல் தனியார் நடத்தும் டவுன் பஸ்களிலும் நஷ்டம் வருவதாக சர்க்காருக்குத் தகவல் வந்திருக் கிறதா ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : ராஜ்யம் பூராவும் கட்டணம் உயர்த்துவது. மாக்சிமம் இவ்வளவு ஆகத்தான் இருக்கலாம் என்று சட்டம் பிறப்பிக்கப்படும். அந்த மாக்சிமத்திற்குள்ளே வைத்துக்கொள்ளலாம். மாக்சிமம் உயரவேண்டும் என்றுதான் இப்போது நோட்டிபிக்கேஷன் போட்டிருக்கிறோம்.

திருமதி பி. கே. ஆர். லக்ஷ்மிகாந்தம் : சென்னை நகரில் ஓடுகிற பஸ்களில் உள்ள கண்டக்டர்கள் பொது மக்களிடம் மரியாதையாக நடந்து கொள்ள ஏதாவது பயிற்சி அளிக்க உத்தேசமுண்டா ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : நாளை மறுதினம் விவாதத் தில் பேசலாம்.

இந்தி எதிர்ப்புக் கிளர்ச்சியில் தண்டனையடைந்தோர்

*221 **கேள்வி.—திரு. வெ. கிருஷ்ணமூர்த்தி :** கனம் செய்தித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

சென்னை மத்திய சிறையில் வைக்கப்பட்டிருக்கும் இந்தி எதிர்ப்புக் கிளர்ச்சிகளில் தண்டிக்கப்பட்டவர்களுக்கு எந்தவித மான வேலைகள் செய்யவேண்டுமென உத்தரவிடப்பட்டுள்ளது ?

கனம் திரு. கோ. பூவராகன் : கைதிகளின் திறன், விருப்பம், முன் னுள் பழக்க வழக்கங்கள் முதலியவற்றிற்கேற்ப தச்சுவேலை காகிதம் செய்தல், நூற்பு வேலை போன்ற வேலைகளைச் சிறை மேற் பார்வையாளர் கைதிகளுக்குத் தருகிறர்.

திரு. வெ. கிருஷ்ணமூர்த்தி : கிரிமினல் கைதிகளுக்கும், அரசியல் கைதிகளுக்கும் இந்தக் கடின உழைப்பு கொடுப்பதில் ஏதாவது வேறுபாடுகள் காட்டப்படுகின்றனவா ? திராவிட முன்னேற்றக் கழகத்தின் தலைவர்களாக இருக்கிற திரு. அன்பழகன், திரு. மதியழகன் போன்ற சட்டமன்ற அங்கத்தினர் கள் என்ன வேலைசெய்து கொண்டிருக்கிறர்கள் என அறிய விரும்பு கிறேன்.

கனம் திரு. கோ. பூவராகன் : திரு. மதியழகன், திரு. அன்பழகன் போன்றவர்கள் என்ன வேலை செய்து கொண்டிருக்கிறர்கள் என் பதற்கு என்னிடம் இப்போது விவரம் இல்லை. மொத்தமாக அதில் ஈடுபட்டவர்கள் எந்தெந்த வேலைகளில் ஈடுபட்டிருக்கிறர்கள் என்று சொல்ல முடியும். பதினேரு பேர்கள் தச்சு வேலை செய்கிறர்கள். மாவு அரைக்கும் வேலையில் 11 பேர்கள் இருக்கிறர்கள். காகிதம் செய்யும் வேலையில் 13 பேர்கள்: 7 பேர்கள் பிரம்பு வேலை செய்